583

உ

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5—சிலை திருநலம், மாம்பாக்கம்; விசய, ஆவணி 21—8—53 தனி—47

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

வறுமை தீர வழி

வறுமை தீர்வதற்கு, உடைமை பொதுவாக வேண்டும், தொழில்கள் சிறக்கவேண்டும், கண்டு பிடிப்புகளும் வினை பொருள்களும் பெருகவேண்டும், விஞ்ஞானம் மிகவேண்டும் எனவெல்லாம் ஒரு பக்கம் கிளர்ச்சிகள் நடக்கின்றன. திருவள்ளுவர் குறளை நோக்கினால், இவற்றையெல்லாம் அவர் அவ்வளவாகக் காதில் போட்டுக்கொள்வதாகத் தெரியவில்லை.

இவையெல்லாம் நிகழ்வதற்கு முன், அடிப்படைக் குணநலம் முதன்மையானது என்பது திருவள்ளுவர் கருத்தாகும்! எல்லாரிடத்திலும் இன்சொல் கூறிப் பழகுதலே வறுமை தீர முதல் வழி என்று அவர் ஒரே தீர்மானமாய்த் தமது துணிபைத் தெரிவிக்கிறார்.

இன்சொல் கூறுதல் முதலில் எல்லாரையும் மகிழ்விக்கின்றது; பின்பு அவரெல்லாரையும் தொடர்பு கொள்ள வைத்து அணுக்கமாக்கி நண்பராக்குகின்றது. அதன்பின், அவர் பொருள் இவர் பொருளாய் உடைமை பொதுவாகின்றது. அறிவுக்கும் உழைப்புக்கும் துணைகளை உண்டாக்கி, வளப் பெருக்கம் வாய்க்கின்றது.

கீழோர் மாட்டும் தாழ இன்சொல் உரைக்கும் இயல்பு நாளடைவில் பகைவர் மாட்டும் அஃதுரைக்கும் பண்பை மிகுத்து விடும்; இன்சொல் உரிமையியல்பாகி 'இன்சொலவர்' என்றே பெயரெடுக்கும் பெருமையை உண்டுபண்ணிவிடும்.

அத்தகைய இன்சொலவர்க்கு உலகில் எய்தாததென்பது யாதும் இல்லை. துன்புறூஉந் துவ்வாமை அடியோடு இல்லாகும்.

திருவள்ளுவரைவிட மக்களுக்கு அடிப்படை ஆக்கமொழி கூறுவோர் உலகில் யார் இருக்கின்றனர்? வாழ்க்கைச் சுமையைக் குறைத்து, உயர் வகையாய்ப் பெருவாழ்வு வாழ வழி வகுப்பவர் திருவள்ளுவப் பெருமான்! அவர் செலுத்தும் பாதை இயல்பான உரிமைப் பாதை! இன்சொல், துய்த்தலில் உயர்வகை நுகர்வு ஆதலோடு மனத்தூய்மையும் விளைத்து வீட்டொழுக்கத்துக்கு ஏதுவுமாவது!

துன்புறூஉந் துவ்வாமை
இல்லாகும், யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

யார் மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்கு—எல்லாரிடத்திலும் இன்பம் மிகுவிக்கும் இன்சொல் உடையவர்க்கு, துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்—துன்பத்தை மிகுக்கும் வறுமை இல்லையாகும்.

துவ்வாமை—நுகராமை; அதாவது, வறுமை. இன்பத்தை விரும்பி ஏற்றலால் ஏற்பார் செயலும் நிகழ்தல் தெரிதலின் 'மிகுவிக்கும்' எனப் பிறவினையாகவும், துன்பம் அவ்வாறு விரும்பி ஏற்கப்படாமையின் துவ்வாமையின் நிகழ்ச்சியாகவே வைத்து 'மிகுக்கும்' எனத் தன் வினையாகவும் உரைக்கப்பட்டது.

துய்த்தலால் இன்பமும் துவ்வாமையால் துன்பமும் விளைதல் உலகியல்; துய்த்துந் துவ்வாமை போல்வதாகிய துறவு மெய்யுணர்வுளாகிய நிலை, அதனால் இன்ப துன்பங்கள் கடந்த வீட்டு நிலையாதல் அருளியல்!

வேண்டாதார் கீழோர் முதலியோரிடத்திலும் என்றற்கு, 'யார் மாட்டும்' என்றார்.

—:—:—

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, ஆவணி	தளிர்
5	21-8-53 வெள்ளி	47

பாராட்டு

சென்ற ஆண்டு ஆனிமாதத்தில் ஆசிரியர் தொண்ட நாட்டுத் திருப்பயணத்தை மேற்கொண்டார். அதுபோது திரு. வரதா செட்டியார் தம்பதிகள் திருவரசிலியில் மயிலம் சிவத்திரு. சிவஞான பாலைய சுவாமிகளால் அறிமுகம் செய்யப்பட்டார்கள். நாங்கள் இருக்கும் இடந் தேடி ஆண்டவனைப் போலத் தம் ஊராகிய காட்ராம்பாக்கத்திலிருந்து திருவரசிலிக்கு உணவு கொண்டு வந்து படைத்து மகிழ்ந்து மகிழ்வித்த இத் தம்பதிகள் இவ்வாண்டு ஆசிரியர் மேற்கொண்ட நடு நாட்டுத் திருப்பயணத்தையும் முன்னின்று மிகச் சிறப்பாக முடித்தனர். நூற்றுவர்க்கு மேற்பட உடன் வந்த அன்பர்கள் அனைவருக்கும் அங்கங்கே சிறப்பான வரவேற்பும் (மேள தாளங்களுடன்) விருந்தும் வண்டி முதலிய வசதிகளும் இவர்களால் வாய்த்தன. அப்போது இவர்கள் காட்டிய அன்பும் ஆதரவும் வாழ்வில் என்றும் மறக்க முடியாதனவாகும். எங்கள் காவலராக ஏன், தாய் தந்தையராகவே அவர்கள் காட்சியளித்தனர். குருகுலத்தின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி அதன் கிழமை இதழாகிய இம் முல்லைக் கொடிக்கு வாழ்நாள் உறுப்பினராய் இருப்பதோடு, திருக்குறட் செயலகமாகிய அதன் பல செயல்களில் ஓர் அதிகாரச் செயலை அப்படியே ஏற்று நடத்தவும் இத் தம்பதிகள் முன்னியிருக்கிறார்கள். இவர்களால் குருகுலத்தில் பல நல்ல வளர்ச்சிகள் உண்டாகும் என்று தெரிகிறது.

அரிய பல நலங்கள் அமைந்த இத் தம்பதிகள் 18-6-53 முதல் 14-8-53 வரை திருப்பயணமாகப் புறப்பட்டு, உறவினர் அன்பர் இருபது பேருடன், வட நாட்டிலுள்ள பூனா, பம்பாய், நாசிக், போபால், ஆக்ரா, மதுரா, டெல்லி முதலிய நகரங்களைக் கண்டும்; ஹரித்துவார், பத்திரிநாத், இலட்சுமணபுரி, அயோத்தி, அலகாபாத், காசி, கயா, புவனேஸ்வரம், பூரி, கோதாவரி முதலிய இடங்களிலுள்ள மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாக வழிபட்டும் மீண்டார்கள். போகிறபோதும், திரும்பிய பிறகும் இவர்கள் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மன்றத்தில் [illegible] ஆசிரியரின் அடியிணைகளை வணங்கிக் குருகுலத்தாரோடு அளவளாவி மகிழ்ந்தார்கள்.

சிறக, பத்திரிநாத் பயணம் மிகவும் கடுமையானது. பனி மலைமேல், கடுங் குளிரில், ஒடுங்கிய பாதைகளில் இவர்தல் (ஏறுதல்) என்பது எளிதன்று. அவ்விடத்திலுள்ள நிலைகளால், சில நேரங்களில் உயிருக்கே இறுதி நேர்ந்தாலும் நேரும். இவ்வரிய பயணத்தை இனிதே முடித்துத் திருவருளுதவியால் நல்லபடி வந்து சேர்ந்த இத் தம்பதிகளைக் காண்பதே ஒரு பெரிய பேறு எனலாம்.

15-8-53- வெள்ளியன்று காலைச் சென்னைச் சென்ட்ரல் நிலையத்தில் குருகுல அன்பர்கள் குழுமியிருந்து, திருப்பயணம் சென்று திரும்பிவந்தவர் அனைவர்க்கும் மாலையிட்டு ஆரத்தி எடுத்து, 18-8-53 அன்று திருக்கூட்ட வார வழிபாட்டின் போதும் 19-8-53 அன்று ஆசிரியரின் கந்தரநுபூதி விரிவுரையின் போதும் 21-8-53-ல் மாம்பாக்கத்திலும் இவர்களுக்குப் பாராட்டும் வாழ்த்தும் நிகழ்த்தப் பெற்றன. முன்னாள் காசிக்கயிறும், கங்கைநீரும் வழிபாட்டிற்கலந்து கொண்டோர் அனைவர்க்கும் ஆசிரியர்வழி வழங்கப்பட்டது. சில குருகுலத் தொண்டர்களுக்கு அக்க மாலையும், மாதர்களுக்குச் சேலை, பூ, மஞ்சள், வெற்றிலை பாக்கும் வழங்கப்பட்டன. "வாழ்த்தியல் பாராட்டுரை" ஒன்றும் அச்சிட்டு அளிக்கப் பெற்றது.

திருப் பயணங்களின் பயன்களைப் பற்றி ஆசிரியரிடமிருந்து இந் நிகழ்ச்சிகளினால் அரிய பல உண்மைகள் வெளிவந்தன. அப்பயன்களை எல்லாம் பெற்ற இத் தம்பதிகள் தம் நல்வாழ்வில் மேலும் மேலும் சிறந்து மிளிர்வார்களாக!

பண்புப் பணி

"கன்னி"

நயனொடு நன்றி புரிந்த
பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

இது தமிழ் மறையோன் உலகுக்குதவிய குறள் மாலையின் ஒரு மணி! அறியாமை என்னும் இருட்டிலே உழலும் நமக்கு அறிவொளியைக் காட்டி நல்வழிச் செல்ல இவ்வொரு மணி போதும்.

ஆயிரத்து முன்னூற்று முப்பது மணிகள் ஒளி வீசிய போதிலும், அறியாமை இருளினின்றும் நீங்காது செம்மையற்ற வழியிலே செல்வோரும் உண்டு. செங்கதிரோன் ஆட்சி நேரத்திலும் இருகண்களையும் மூடிக் கொண்டவர்க்கு உலகம் இருண்டுதானே போகிறது!

பகுத்தறிவு பெற்ற ஒவ்வொருவரும் பண்புடையவராக இருத்தல் வேண்டும். பண்பு தன்னலத்திற்கு மட்டும் பயன்படும்படி இருத்தல் கூடாது தன்னலத்தோடு ஓரளவாகிலும் பிறர் நலத்திற்கும் பயன்படும்படி அமையவேண்டும். அப்போதுதான் பண்பு, நிறைவை அடைகிறது.

இப் பண்பு நிறைவைச் செல்வர்கள் எளிமையாக அடைய முடியும். தம் பொருளின் ஒரு பகுதியை எளியோர்க்களித்துத் தன்னலத்தையும் பிறர் நலத்தையும் ஒருங்கே வளர்க்கலாம்.

ஈதல் இசைபட வாழ்தல்
அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

என்ற ஒளியைப் பளிச்சென்று காட்டுகின்றதே மற்றொரு மணி!

எளியோர் செயல் வகைகளில் தான் பணியாற்றிப் பண்பு நிறைவை அடைய இயலும். அறிவுடையோர் பிறர்க்கு அறிவு புகட்டலாம்; ஒழுக்கமுடையோர் ஒழுக்கமறியா திருப்போர்க்கு ஒழுக்கத்தை அறிவிக்கலாம். தொழில் வல்லோர் அறியாதோர்க்குக் கற்பிக்கலாம் ஆக எவ்வகையாலேனும் ஒருவருக்கொருவர் உதவ அனைவராலும் இயலும்.

வண்டியில் பூட்டும் காளை மாடுகள் கூட ஓய்வு நேரத்தில் ஒன்றை ஒன்று நாவினால் சொறிந்து பணியாற்றுகின்றதே! கெட்டுப் போன வண்டியைப் பழுதுபார்க்குமிடத்திற்கு இழுத்துச் செல்ல மற்றொரு வண்டி உதவுகிறதே! நாம் மட்டும் தன்னலத்தையே பாராட்டி வாழ்வது முறையா?

ஒரு நாள், கண்ணொளி குன்றிய பிச்சைக்காரக் கிழவன் ஒருவன் தெருவில் வந்து கொண்டிருந்தான். அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. பாதை எல்லாம் சேறும் நீருமாய் இருந்தது. கிழவன் கால் சறுக்கிச் சாலை ஓரத்திலிருந்த சிறு கால்வாயில் விழுந்து விட்டான். எவ்வளவு முயன்றும் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. தெருவில் போவோரில் ஒருவராகிலும் அவனைத் தூக்க முன் வரவில்லை. ஏன், இவ்வளவு எழுதும் நானும் என் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டுதானே இருந்தேன்!

அரை நாழிகைக்குப் பிறகு எங்களூர் ஆசிரியர் அவ்வழியே வந்தார். கிழவனைக் கண்டதும் விரைந்து சென்று தம் இரு கைகளாலும் அவனைத் தூக்கினார். அவனால் நிற்க முடியவில்லை. ஆகலால், அவனை அணைத்தபடி சற்று நேரம் பிடித்திருந்தார்.

இதற்குள், கிழவனால் நிற்க முடிந்தது. தம் மேல் துண்டினால் அவன் உடலைத் துடைத்து விட்டு அதைத் தம் தோள் மேலே போட்டுக் கொண்டார். தம் சட்டைப்பையில் கையை விட்டுத் துழாவினார் வெறும் கைதான் வெளி வந்தது. அவர்தான் ஆசிரியர் ஆயிற்றே! வெண்மையாக அணிந்து வந்த உடைகளிலே சேற்றுக் கறைகளுடன் அவர் போவதைப் பார்த்தேன்.

அன்றுதான் முதன்முதலாகப் பிறர்க்குப் பணி செய்ய வேண்டுவது நம் கடமை என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. பணியாற்றும் போது ஏற்றத் தாழ்வை எண்ணக் கூடாது என்பது தெரிய வந்தது.

சிலர் பணியாற்ற வேண்டும் என்று எண்ணினாலும் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தி அவ்வெண்ணத்தைக் கைவிடுகிறார்கள்.

கிழவனுக்குத் தம் உடலினால் உதவிய ஆசிரியர் எனக்குத் தம் பண்பினால் பண்பை உண்டாக்கினார். கிழவனுக்கு அவர் செய்த பணியை விட எனக்கு அவர் செய்த உதவிதான் அதிகம் என்று நான் எண்ணுகிறேன்.

ஆசிரியரின் எஞ்சியுள்ள தமிழ் நாட்டுத் திருப்பயணங்களுக்கும் வடபுலத்துத் திருப்பயணங்களுக்கும் உடன் வந்து உதவுவதாகவும் இத் தம்பதிகள் தெரிவித்துள்ளனர்.

வாழ்க வரதாரெட்டியார்
தம்பதிகள்!
விளைக திருப்பயண நன்மைகள்!
வெல்க குருகுல முயற்சிகள்!

செல்வி

அத்தியாம் ௨.

(முன் தொடர்ச்சி)

கடிகாரம் டாண் டாண் என மணி 5- அடித்தது. 'வைகறை துயிலெழு' என்ற மொழிப்படி 'நித்தியானந்த ஹவுஸில்' உள்ளவர்கள் எழுந்தனர் வீட்டு வேலைக்காரியும் எழுந்து தன் வேலையைக் கவனித்தாள். தினகரனும், மனைவி சுசிலாவும், தங்கள் காலைக் கடனை முடித்துப் பூசையில் அமர்ந்தனர்.

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்ற மொழியும் அவர்கட்குத் தெரியும் கடவுளை வழிபட அவர்கள் திருவருட் பாவிலுள்ள இனிய, சுவை பொருந்திய, நற் செந்தமிழ்க் கருத்து வாய்ந்த பல பாடல்களைப் பாடினர். தொழுதனர். வேலைக்காரி காலைச் சிற்றுண்டியைச்செய்துகொண்டுவந்தாள் அதை அருட்பெருஞ் சோதியாகிய நடராசர் படத்தின் முன்பு வைத்து வணங்கி எழுந்தனர். பின்பு உட்கொண்டு அவர்கள் தம் அலுவலைக் கவனிக்கச் சென்றார்கள். இது, அவர்களுடைய தினசரிப் பழக்க வேலையாகும்.

'சுசிலா, இன்று சினிமாவுக்குப் போக வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டேன், நீயும் உடனே உண்டு விட்டுக் கிளம்பு' என்று கூறிக் கொண்டே பகல் உணவைச் சாப்பிட்டார் தினகரன்; 'சுசிலா டிரஸ் செய்து விட்டாயா? போகலாமா?' எனக் கேட்டார் தினகரன்; 'இதோ டிரஸ் பண்ணிக்கொண்டிருக்கிறேன், இதுக்குள்ளே அவசரப் பட்டால் எப்படி' என்றாள் சுசிலா; 'பெண்கள் டிரஸ் செய்யறதுக்குள்ளே 4 சினிமாப் பார்க்கலாம்' என்றார் மேலும்; 'கார் வந்து கொண்டே இருக்கும், உடனே புறப்படு' என்றார் தினகரன்; 'கார் வந்தால் வரட்டுமே டிரஸ் பண்ணிக்கொண்டு தானே புறப்பட வேண்டும்.' என்று விடையிறுத்தாள்.

கந்தசாமி முதலியின் தம்பிதான் இந்த தினகரன். கந்தசாமியும் தினகரனும் திரிசிரபுரங் கிராமத்திலே நன்றாகத்தான் வசித்துவந்தார்கள். தினகரனுக்கும் நிலம் இருந்தது அந்த நிலத்திலிருந்து வருமானம் ஒன்றும் வராததால் அதை விற்றுவிட்டுச் சென்னைப் பட்டணத்தில் வந்து ஒரு சிறிய பொடி கடை ஆரம்பித்தார்கள். சிறிது சிறிதாக அக் கடை பெரிதாகி விட்டது. பணம் நிரம்பச் சேரவே பல பிரமுகர்களும் அறிமுகமாகிவிட்டார்கள். இவர்கள் சுகமாகத்தான் தங்கள் காலத்தைத் தள்ளினர். ஆனால் தமக்கு ஒரு புத்திரன் கூட இல்லையே என்பது தான் அவர்களுக்குள்ள ஒரு பெரும் கவலையாகும்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்.

என்றார் வள்ளுவர். எழு பிறப்பிலும் தீமை தீண்டாமல் இருப்பதற்கு அறிவும் நற் பண்பும் வாய்ந்த மக்கள் அவசியமல்லவா? இக்குறையைப் போக்கிக் கொள்ள அவர்கள் வருடந் தோறும் ஓரிரு தலங்களுக்குச் சென்று தங்களால் இயன்ற வரையிலும் ஏழை எளியவர்கட்கு அன்னதானம் செய்து திரும்புவார்கள். அதோடு மட்டுமல்ல. தம் அண்ணனுக்கும் வேண்டிய சமயங்களில் பணம் அனுப்புவதும் உண்டு. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல் என்ற மொழி அவர்களுக்கு அவசியம் பொருந்தும்.

ஹார்ன் சப்தம் கேட்டது. 'சுசிலா ரெடிதானே' என்றார். வீட்டு வேலைக்காரி ஓடிவந்து, 'அம்மா ராமசாமி மகன் சின்ன தம்பியே காரைக் கொண்டுவந்திருக்காரம்மா' என்று ஆச்சரியம் கலந்த குரலில் சொன்னாள்; 'சரிதாண்டி, வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். நாங்கள் 6 மணிக்கெல்லாம் வந்து விடுவோம்' என்று கட்டளையிட்டாள் சுசிலா; பின்பு காரில் வந்து இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

கார் கிளம்பியது. வேகமாக ஓடிற்று; இல்லை, பறந்தது. ஆம் பின்னால் பறக்கும் தூசுகூடக் கண்ணுக்குத் தெரியவில்லை; அவ்வளவு வேகமாக ஓடித்

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

திருப்பமும் திரும்பி விட்டது. அது வரையிலும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்த சுசிலா தன் கணவனை நோக்கி 'ரிசர்வ் டிக்கட்டை எடுத்து வந்தீர்களா?' என வினவினாள். இல்லையே என்று ஏமாற்றமுடன் பதிலுரைத்தான், அவ்வளவுதான் கார் மறுபடியும் வீட்டை நோக்கிப் பறந்தது. 'மணி கூட ஆயிடுச்சு' இன்னும் 10 நிமிடம் தான் உள்ளது' என்று அறிவித்தான் சின்னதம்பி. கார் வீட்டில் வந்து நின்றது. 'டிக்கட்டைக் கொண்டு வருகிறேன்' என்று கூறிக் கொண்டே காரிலிருந்து இறங்கினார் தினகரன்; வேலைக்காரி கனகம்மாள் ஓடி வந்து எஜமானனைப் பார்த்து 'ஏன் திரும்பி விட்டீர்கள்' என்று வினவியவாறு சிறிது நேரத்திற்கு முன்புதான் கடிதம் ஒன்று வந்தது' என்று மடியிலிருந்து கடிதத்தை எடுக்கக் கையை விட்டாள். ஆனால் அது அவள் கையில் கிடைக்கவில்லை அவள் வீட்டை நோக்கித் திரும்பினாள். 'அதோ! கடிதம் அங்கேயிருக்கிறதே' என்று கூறியவாறே நடையிலிருந்த கடிதத்தைப் போய் எடுத்தார்.

'என்ன! கடிதமா வந்தது. அண்ணாத்தையிடமிருந்து தான் வரவேண்டும். அண்ணாத்தைக்கு ஒரு 50 ரூபாய் அனுப்பி வைக்க வேண்டும் அண்ணிக்கு ஒரு வைர நெக்லஸ் வாங்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே தன் கணவன் முகத்தைப் பார்த்தாள் சுசிலா. அவன் முகத்தில் கவலைக் குறிதான் தென்பட்டது. 'மணியாகி விட்டது. வாங்க மாமா போகலாம்' என்றான் சின்னதம்பி 'எங்கேயிருந்து கடிதம் வந்தது' என்று கேட்டாள் சுசிலா. 'என் அண்ணனிடம் இருந்து' என்று பதிலுரைத்தான். பின்பு தம் சுய நினைவு ஒன்றும் இல்லாமல் உள்ளே சென்று ஷர்ட்டில் டிக்கட்டை எடுத்துக் கொண்டு வந்து காரில் அமர்ந்தான். சுசிலாவும் ஏறிக் கொண்டாள். கார் வேகமாக சினிமாக் கொட்டகையை நோக்கிச் சென்றது.

சினிமா முடிந்தது. வீட்டிற்குத் திரும்பினர். மூவரும் கூடத்தில் அமர்ந்தனர் காப்பி கொண்டு வரப்பட்டது. அதையும் அருந்தினர். சின்னதம்பி விடை பெற்றுக் கொண்டு திரும்பி விட்டான். அவர்கள் இரவு உணவை உட்கொண்டு தாம்பூலம் போட்டுக் கொண்டே மாடியில் வந்து அமர்ந்தனர். சுசிலா: 'உங்கள் அண்ணனிமிருந்து என்னவென்று கடிதம் வந்தது அது வந்தது முதல் கவலையாகவே இருக்கின்றீரே ஏன்?' தினகரன், 'மார்வாரி ஒருவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டுமாம்; அதையும் இந்த மாதஇறுதிக்குள் கொடுக்க வேண்டுமாம். அப்படியில்லாவிட்டால் நிலத்தையும் வீட்டையும் ஏலம் போட்டு விடுவானாம். ஆகவே ரூபாய் ஒரு 200 அனுப்ப வேண்டுமென்று அண்ணாத்தை கடிதம்எழுதியிருக்கின்றார். அண்ணியின் உடம்பு சுமாராக வேறு இருக்குதாம்.

சுசிலா: 'ஆ அப்படியா, அவர்களுக்குள்ள ஒரு காணி நிலத்தையும் ஏலம் போட்டு விடுவானாம்; ஐயோ' எனப் பதறினாள்.

பின்பு நான் என் அண்ணிக்கு வைர நெக்லஸ் அப்புறம் வாங்கித் தருகிறேன். இன்னும் ஏறக்குறைய நாலைந்து நாட்கள் தானே உள்ளன. தாங்கள் நாளை கழித்து மறுநாள் இரவு மெயிலில் வண்டியேறிச் சென்று அவர்களை மீட்டு விடுங்கள். சாப்பாட்டிற்கு ஒரு நூறு ரூபாய் கொடுத்துவிட்டு வாருங்கள். வரும்பொழுது செலவியையும் அழைத்து வாருங்கள்; இங்கே இரண்டொரு மாத காலம் தங்கி விட்டுப் போகட்டும்' என்று தன் கணவனைப் பணிவுடன் வேண்டிக் கொண்டாள். அப்படியே செய்யலாம் என்று அவனும் முடிவு கட்டினான்.

மணி.

(வரும்)

வள்ளியம்மாள் படத் திறப்பு

சென்ற 26-8-53 ஞாயிறன்று முற்பகலில் நம் குருகுலப் பாட்டி, திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழாப் பெருஞ்சோற்று அறப்பெருஞ் செல்வி, பெருமாட்டி, வண்ணையம்பதி சிவத்திரு வள்ளியம்மையார் அவர்களின் படத்திறப்பு வாலாஜாபாத் வள்ளலார் மாணவர் இல்லத்தில் நடை பெற்றது. அவ்வில்லத்துக்கு அவர்கள் ஒரு கூடம் அமைக்க ரூபா 2000 நன்கொடை கொடுத்திருந்தார்கள். அவர் படதிறப்பு நடைபெற்றது நம் ஆசிரியர், அவர்கள் பெயருக்கேற்ப அமைந்துள்ள அம்மையாரின் நல்வாழ்க்கை பற்றியும், அவர்களின் குண நலங்களைப் பற்றியும், நீண்ட காலமாக அவர்கட்கும், குருகுலத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நீண்ட நல்வாழ்க்கை அமைய வேண்டுமென ஆண்டவனை வேண்டிப் படத்தைத திறந்துவைத்தார்கள்.

வாழ்க வள்ளியம்மையார்!

அருள் துறை

வினா வெண்பா

(மோகனரங்கன்)

நம் ஆசிரியர், மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் உமாபதி சிவாசாரியாரருளிய நூல்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, தமக்கேயுரிய தோர் ஒப்பற்ற தனிப்போக்குடன் எளிய இனிய முறையில் அதியற்புதமான வகையில் விளக்கம் செய்து வருகிறார். இப்போது "வினா வெண்பா" விளக்கம் முடிந்தது. அவ் விளக்கத்தின் சுருக்கம்:—

'வினா வெண்பா' என்பது 13 வெண்பாக்களாலான சிறு நூல். இதனால் சமய சாத்திரக் கருத்துக்களிலெழும் சந்தேகங்கள் தீரும்.

மறைஞான சம்பந்தர் சந்தான குரவர். உமாபதி சிவாசாரியரின் குருதேவர். உமாபதி சிவாசாரியார் சந்தேகங்களைத் தாமே ஊகித்து எழுப்பித், தம் ஆசிரியரைப் பார்த்து ஐயத் தீர்வுக்குக் கேள்விகள் கேட்கிறார். சாஸ்திரமே படியாத ஒருவன், கேட்டுப் பழகித் தெளியாத ஒருவன், இறைவனைப் பற்றி நம்பிக்கையில்லாது குதர்க்கம் பேசும் நாத்திகன், கேள்வி கேட்கும் முறையில் வினவுகிறார்.

முதற் கேள்வி:—அழகிய சோலை சூழ் உயர் மருத நகர் வாழ் சம்பந்த மா முனிவரே! ஒளியும் இருளும் ஓரிடத்தில் ஒரே நேரத்தில் இரா. ஞானமும் அஞ்ஞானமும் அப்படியே. தேவரீரோ ஞானமயமான ஆசிரியர். நானோ அஞ்ஞான மயமானவன். ஒளிமயமான தாங்கள் இருண்மயமான என்னிடம் எப்படி வந்து சேர்ந்தீர்?

உலகம் இருள் மயம்; இருள் அதிகம், ஒளி கொஞ்சம். நேர் மாறான வேறு வேறு தன்மையும் போக்குமுடைய இரண்டும் தனித் தனிப் பொருள். புலியும் பசுவும், பாம்பும் கீரியும் போன்றவை. இருள் எங்கும் பரவி விரவிப் பரிபூரணமாய் நிறைந்திருக்கும். ஒளி திட்டு திட்டாயிருந்து ஆங்காங்குப் பாய்ந்து இருள் கிழித்துப் பிரகாசிக்கும். இருள், நீரில் பாசி போல் பரவிக் கவிகிறது; வேகமாய் வந்து தாக்குகிற மாதிரியும் இருக்கும். ஒளி ஞானம், இருள் ஆணவம் (அஞ்ஞானம்). கண்ணுக்குத் தெரியாத நிலையிலிருப்பவை ஞானமும் ஆணவமும்; கண்ணுக்குத் தெரிகிறவகையிலிருப்பவை ஒளியும் இருளும். உலகத்தில் பிரகாசமும் இருட்டும் வேலை செய்வதுபோல நம் உள்ளத்தில் ஞானமும் ஆணவமும் வேலை செய்கின்றன.

ஞானம் வரும்போது ஆணவம் போம். எதற்கு ஆற்றல் அதிகம்? ஒளி வந்தால் இருள் பயந்து ஓடிவிடும் ஏனென்றால் இருட்டுக்குப் பிரகாசத்தைத் தூரத்தும் சக்தி யில்லை. ஒளியை இருள் தாக்காது; நிறைந்து அவித்து அமுக்க முடியாது. ஒளிக்குச் சக்தி அதிகமாதலால் அது இருளை ஓட்டும். அதனால் ஞானத்துக்குத்தான் ஆற்றல் அதிகம். ஞானப் பிரகாசம், சிவப்பிரகாசம், அருட் பிரகாசம் என்கிறோம்; யாரும் இருள் பிரகாசம் என்பதில்லை.

பிரத்தியக்ஷம் கொண்டுதான் அனுமானம் கொள்ளவேண்டும். பின் சான்று கொடுக்கவேண்டும். கண்ணுக்குத் தெரிந்ததைக் கொண்டு தெரியாததை ஊகிக்க வேண்டும். உலகிலுள்ள பொருளைக் கொண்டு உலகில்லாப் பொருளை ஊகிக்க வேண்டும். அப்படிப் பார்க்க இருளும் ஒளியும் பகையாக இருக்கும்போது ஒளி இருளை ஓட்டுவதால் ஒளிக்குச் சக்தி அதிகமென அறிகிறோம். அதனால் ஒளி மயமான ஞானம் ஒளிரும்போது இருண்மயமான அஞ்ஞான ஆணவம் ஓடிவிடுகிறது. ஞானம் இல்லா விட்டால் ஆணவம் கட்டாயம் இருக்கும்.

ஆகையால் நாம் எப்போதும் ஒளியுடன் பழகிக்கொண்டிருக்க, ஆணவ இருள் அகன்று ஞானம் சித்திக்கும். இயற்கையிலும் இப்படி; ஒளி எப்போதும் இருக்கிறது. பகலில் சூரியன், இரவில் சந்திரன் தாரகைகள் மின்னொளி இருக்கின்றன. எப்போதும் எது செய்தாலும் நாம் ஒளியுடன் தொடர்பு கொண்டு செய்ய வேண்டும். கலியாண காலத்தில் அகல் விளக்கு, குத்து விளக்கு, குட விளக்கு முதலியன வைப்பதும், தாலி கட்டும்

போது ஒரு தனி விளக்கைப் பக்கத்தில் பிடித்துக் கொள்வதும் எதைக் குறிக்கிறதென்றால் மனமக்கள் வாழ்க்கை எப்போதும் ஒளியுடன் திகழ்தற்குரியது என்பதை உணர்த்தும் என்பது. சான்றோர்களைப் பூரண கும்பம் விளக்குகளுடன் வரவேற்கிறோம். யாராவது பெரியோர்கள் எதிர்பாராமலேயே நம் இல்லத்திற் கெழுந்தருளினால் உடனே ஓர் விளக்கு ஏற்றி வைக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆணவ இருள் வந்து நம்மைக் கட்டாயம் கப்பிக்கொள்ளும். விளக்குவைத்தல் வீட்டுக்கு மங்கலம். மற்ற அழகிய மின்சார விளக்குகளிருந்தபோதிலும் ஒரு எண்ணெய் விளக்கு, ஞான வொளி, அருட்பிரகாசமான ஆண்டவன் எனப் பாவிக்க அவசியம் இருக்கவேண்டும். விளக்கை நிறுத்திவிட்டுப் படுக்கக் கூடாது. சிறு திரியாகவாவது எரிய விடவேண்டும். பகல் இரவு எப்போதும் வீட்டில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது ஒளியோடு பழக நல்ல சாதனம். வெளியே சிறு அளவில் செய்வ பாவனையில் ஒரு விளக்கு இருக்க உள்ளேயுள்ள இருள் அகல்கிறது. உலகமெல்லாம் ஒளி கொடுக்கும் ஒரு பெரும் பிரகாசமான சூரியனைப் பார்த்துப் பாவிக்கலாம். சூரியோதயத்தின்போதும் சூரியாஸ்தமனத்தின் போதும் அருள் தொடர்பு கொள்ள விழைபவரனைவரும் சூரிய வணக்கம் செய்து பாவித்தல் சிறந்தது. உள்ளத்தில் பாவனைக்குப் பிடிபட நன்றாய்ப் பற்றுக் கொள்ள, உருவம் கொள்ள இந்த நேரங்களில் இறை வணக்கம் வேண்டும். அதற்காகத்தான் ஒரு பெரியோர் வரும் போது வணங்குவதென்பதும், உற்சவ காலங்களில் இறைவனைக் கோபுரவாயிலில் தரிசிக்கலென்பதும்; ஒருவரை ரயிலடியில் போய்ச் சந்தித்து வரவேற்கும்போது உணர்ச்சி உருக்கொள்ளும். அதனால் கதிரவன் தோன்றும் போதும் மறையும் போதும் ஒளியோடு பழக வேண்டுமென்பது. உலகில் ஒளியும் இருளும்போல உள்ளத்தில் ஞான ஒளியும் அஞ்ஞான இருளுமிருக்கின்றன. இருளுக்குப் பலியாகவா நாமிருக்கின்றோம்? ஒளியை நன்றாய்ப் பிடித்துக்கொள்ள இருட்டு நம்மிடம் சேராது. ஒளியோடு கூடவே எப்போது மிருக்க இருட்டின் பயமே இராது. அதேபோல நாம் ஞானிகளுடன் பழகி, ஞான நூல் கல்வி கேள்விகளில் இடையறாது நின்று ஞானப் பிரகாசத்துடன் பழகி வர அஞ்ஞானம் பற்றிப் பயமே இராது. நாம் நல்லவர்களாக இருக்க, பேய் பிசாசு பில்லி சூனியம் முதலிய பயமே வேண்டாம். நல்ல குணங்களுடன் பழகி வர நோய்களும் அணுகா. நம் சந்தேகத்தில்தான் பயமிருக்கிறது. உறுதியில் நாம் தெளிவாயிருந்தால், நல்லவைகளில் நம் மனச் சான்றுக்கு எதிர்ப்பின்றித் தெளிவாயிருந்தால் மற்ற எந்தத் தீமைகளும் நம்மை நெருங்கா.

நிற்க, ஆசிரியர் உணர்ச்சி மாணவர் உணர்ச்சியில் பட்டுத்தானே அருள் செய்ய வேண்டும். மாணவரிடையில் ஆசிரியரிருப்பது இருட்டு நடுவில் ஒளியிருப்பது போன்று ஓரிடத்திலே பொருந்தாத இரண்டும் ஓரிடத்தில் எப்படி பொருந்தின? ஒளியும் இருளும் ஒன்றாய்ச் சேருமா? கூடாது என்றால் ஆசிரியர் மாணவரிடம் சேர்ந்து அருள் புரிய முடியாதே! எனத் தன் இருள் என எண்ணிக்கொண்டு ஐயம் எழுப்புகிறார். இந்த உண்மையோடு நான் பொருந்தும்படி தேவரீர் எவ்வாறு நின்றீர்? எனக் கேட்கிறார்.

இதற்கு விடை நாமே யோசித்து ஊகித்து உணர்ந்து உரைக்கவிட்டிருக்கிறார். ஏன்? இந்நூலே "வினா வெண்பா"த்தானே. "வினா விடை வெண்பா" அல்லவே. அதனால் நாம் தான் விடை பகரவேண்டும்!

ஆசிரியர் தம் பெரிய ஞானங்களை, ஆற்றல்களை, பிரகாசங்களைக் குறைத்துக் கொண்டு மாணவர் எட்டும் நிலைக்கு வந்து ஈடுபாடு கொள்வார். ஆசிரியர் இவருக்காக இரங்கி இவருக்கு அருள் செய்யும்பொருட்டுத் தன் மகோன்னதமான நிலையிலிருந்து இவர் அறிவு ஆற்றல் நிலைக்குத் திட்டமாய் இறங்கி வந்து அருளுகிறார். பெரியோர்கள் ஞானம வெளிப்படையாக வைத்துக் கொள்ளாமல் அருள் செய்யப்படுபவருடைய பக்குவம் ஆற்றல் திட்டத்துக்குத் தக்கபடி தம் ஆற்றலைச் சுருக்கிக் கொண்டு, அஞ்ஞானியைப் போல மற்றவர்க்குக் காட்டிக் கொண்டு வந்தருளுவர்.

சூரியப் பிரகாசம் குருடன் கண்ணுக்குத் தெரியாது; இவன் கண் குருடாயிருப்பதால். சாதாரணக் கண்ணாக இருந்தால் சூரியப் பிரகாசம் வந்து கண்ணைக் கட்டாயம் திறக்க வைக்கும் அப்படியே குருவும் இறங்கி வந்து அருள் புரிகிறார். ஒளியோடு ஞானத்தோடு பழகினால் கண்டிப்பாகத் தீவினைகள் மாயும்.

குருகுலத்தார்க்கு...?

குருகுல அமைப்பு வகையில் மாம்பாக்கத்தில் நம் ஆசிரியர் அவர்கள் இதுகாறும் பெரும்பாலும் தம் வருவாயிலேயே நிலம், கட்டிடம், பள்ளி, அச்சகம், உணவு விடுதி, இதழ், வெளியீடு, விழா முதலிய பலதுறைகளில் ஏறத்தாழ ஒரு நூறாயிரம் ரூபா செலவிட்டிருக்கிறார்கள். இன்னும் குறைந்தது ஐம்பதினாயிரமாவது செலவிட்டு இரண்டாண்டுகளுக்குள் அடிப்படைகளை எல்லாம் அமைத்து முடித்துக் குருகுல மாணவர்களைக் கொண்டு அதன் மேல் நடப்புகளை வழி வழி நடப்பித்து வரவேண்டும் என முடிவு செய்திருக்கிறார்கள்.

எனவே ஆசிரியர் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கும் பணித் திட்டப்படி (நிர்மாணத் தொண்டு வழி) குருகுலத்தை வளர்த்து நடத்தும் பொறுப்பை அதன் மாணவர்களே ஏற்றுக் கொள்ள இடமிருக்கின்றது. ஆர்வமுடையோர் முன் வருதல் வேண்டும். விருப்பமும், வசதியும் உடையவர்கள் அதிகாரப் பொறுப்புக்களை ஏற்று உரிய நிலப்பகுதியைப் பெற்றுச் செயல்முறைகளைக் கேட்டறிந்து அவற்றின் வழி மாம்பாக்கத்தில் தொடர்ந்து பணியை நடத்தலாம்.

மற்றவர்கள் தாம் தாம் இருக்கின்ற இடத்திலேயே இயன்ற அளவு குருகுலத்தின் சான்றாண்மை இயக்கத்தைப் பணித் திட்டத்தில் காட்டியுள்ளபடி பன்னிரு துறைகளில் ஈடுபட்டுக் கொள்கை வகையிலும், பணி வகையிலும் பரப்பி வரவேண்டும். சில அதிகாரங்களின் செயலை மாணவர்களிற் சிலர் எடுத்து நடத்த முன்வந்திருக்கின்றனர். விரும்புவோர் மற்ற அதிகாரச் செய்கைகளையும் விரைவில் ஏற்றுக் கொள்வது நல்லது.

பொதுவாக ஆசிரியர் அவர்களின் பல நற்றொண்டுகளுக்கும், சிறப்பாகக் குருகுல வளர்ச்சிக்கும், அதிகாரப் பொறுப்பை ஏற்கும் மாணவர்களுக்கும், சான்றாண்மை இயக்கத் தொண்டுகட்கும் உறுதுணையாகக் குருதலத் தொண்டர் படை நன்கு பணி மேற்கொள்ள வேண்டும். தொண்டர் படையில் இதுகாறும் தம் பெயர்களைப் பதிவு செய்திருக்கிறவர்கள் தமக்குள் இன்னும் சில கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு முறைகளையும் செய்து கொள்ள வேண்டும். மற்றும் பலரைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளவும் முயல வேண்டும். தொண்டர் படை (ஆடவர்களுக்கு ஒன்றும், மாதர்கட்கு ஒன்றுமாக இருப்பது) மேலும் நன்கு அமையவேண்டும். விரைவில் பல குருகுலப் பணிகள் சென்னையிலும், மாம்பாக்கத்திலும், பிற இடங்களிலும் சிறப்பாக மேலும் மேலும் நடைபெறவேண்டியுள்ளன.

நிற்க, இப்போது சென்னையில் மட்டும் பல பேட்டைகளிலிருந்தும் ஏறத்தாழ நூறு குடும்பங்களும், 300 தனிப்பட்ட அன்பர்களும் ஆசிரியர் சூழலில் தொடர்பாக ஈடுபட்டுப் பழக்கமும் பெற்று வருகின்றனர். பிற இடங்களில் உள்ளவர்கட்கும் இத் தொண்டுகள் சிறக்க நிகழவேண்டும்.

இவ்வரிய சூழலை நன்கு வளர்க்கவும், சென்னையில் மேலும் பரப்பவும் அனைவரும் முயலவேண்டும்.

பேட்டைச் சொற்பொழிவுகளைத் தொடங்கிக் கிழமைக்கு (வாரத்துக்கு) ஒரு பேட்டையாகப் பேட்டைதோறும் நடத்துவது இதற்குப் பெரிதும் உதவியாயிருக்கும். அதுவே குருகுலச் சான்றாண்மை இயக்கத்தை நன்றாக உருவாக்கிப் பல நன்மைகளைக் குருகுலத்தார்க்கும் நாட்டுக்கும் உண்டாக்கும்.

பேட்டைச் சொற்பொழிவுகளைத் தொடங்கு முன் குருதல மா நாடு ஒன்றைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டும் என்று ஆசிரியர் அவர்கள் கருதுகிறார்கள்.

ஆதலின் தொண்டர் படை அமைப்பு, பேட்டைச் சொற்பொழிவு, குருகுல மா நாடு, அதிகாரச் செய்கைகள் இவைகளைப் பற்றிக் கலந்து பேசிச் சில முடிவுகள் செய்து செயலாற்றவேண்டியிருக்கிறது. அதற்காக 30-8-53-ஞாயிறன்று பிற்பகல் 3 முதல் 4 மணி வரை சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடைபெறும். குருகுலத்தார் அனைவரும் சிறப்பாகத் தொண்டர் படையிற் சேர்ந்துள்ளவர்களும் வந்திருந்து அக் கூட்டத்தை நன்றாக நடைபெறச் செய்து தம் கருத்துக்களை வழங்கி ஆவன செய்ய வேண்டும் என்பது கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்:- பணிவுள்ள,

ந. ரா. ஆடலரசு.

செய்தியாளன்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)